GODDependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்

ஜூன் 2025



## பரத்தில் இருந்து வரும் ஞானம்

**பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. (யாக்கோபு 3:17)**

பண்டைய காலங்களில், "கிழக்கில் (கீழ்திசை நாடுகளில்) இருந்து ஞானம் வருகிறது" என மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்தவர்கள் சொன்னார்கள். நாம் வாழும் இக்காலத்திலும் கூட கிழக்கத்திய நாடுகளின் கலாச்சாரம், மதங்கள், தத்துவங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் மேலை நாட்டவரை இங்கு வரும்படி தொடர்ந்து கவர்ந்திழுக்கிறது. இப்படி நடப்பதற்கு பல காரணங்களை ஜனங்கள் கூறுகின்றனர். இதை நம்பும்படி அல்லது சொல்லும்படி ஒரே மாதிரியாக சிந்திக்கும்படி சமுதாயமானது கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்று நான் சிலநேரங்களில் நினைப்பதுண்டு. உதாரணமாக, நீண்ட நரைத்த தாடியுடன் கண்ணியமான ஆடையை அணிந்து செல்பவர் ஞானி என்றும் மதிக்கத்தக்கவர் என்றும் ஜனங்கள் நினைப்பதைச் சொல்லலாம்.

ஞானம் என்ற வார்த்தையானது அறிவு மற்றும் புரிதலின் அடிப்படையில் சரியான முடிவுகளை எடுத்தல் மற்றும் சிறந்த செயல்களைச் செய்தலைக் குறிக்கிறது. "தேவனுடைய பார்வையில் வாழ்க்கையை பார்க்கக்கூடிய திறமையே ஞானம்" என ஒரு வேத பண்டிதர் கூறுகிறார். "பரத்திலிருந்து வருகிற ஞானம்" குறித்து நாம் யாக்கோபு 3.17-ல் வாசிக்கிறோம். யெகோவா தேவனிடத்தில் இருந்து வருகிறதைக் குறிக்க யூத ரபிமார்கள் வழக்கமாக பயன்படுத்துகிற சொல்லாடலே "பரத்தில் இருந்து அல்லது மேலே இருந்து வருகிற" என்பதாக பல வேத அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். ஞானத்தை நாம் எங்கே கண்டுகொள்ள முடியும். அது பரலோகத்தில் இருக்கிற தேவனிடம் இருந்து வருகிறது (யாக்கோபு 1:5). "தேவன் நம்மில் செய்கிற நற்கிரியைகளினால் மட்டுமே உண்டாக்கப்படக்கூடிய அற்புதமான வாழ்க்கையே ஞானம் ஆகும்" என சார்லஸ் ஸ்பர்ஜன் கூறுகிறார். முந்தைய வேதவசனங்களில் பரத்தில் இருந்து வராத பொய்யான ஞானம் பற்றி யாக்கோபு எழுதுகிறார். அந்த லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமான" ஞானத்தை நாம் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளமுடியும். நம் வாழ்க்கையில் ஒழுங்கின்மையையும், தீய பழக்கவழக்கங்களையும் உண்டாக்குகிற இப்படிப்பட்ட பொய்யான உலக ஞானம் நமக்குள்ளே இருக்கிறதா என நாம் நம்மைநாமே பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட பொய்யான ஞானத்தின் அடிப்படையில் செயல்படுவதை உடனே நிறுத்துங்கள் என யாக்கோபு விசுவாசிகளை எச்சரிக்கிறார். "உங்கள் இருதயத்திலே" என்று அவர் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இது, பிரச்சனையானது அகம் சார்ந்தது என்பதைக் குறிக்கிறது.

"நான் ஞானத்தில் வளருகிறேனா?" என அவ்வப்போது நம்மைநாமே கேட்டுக்கொள்வது நல்லது. ஏனெனில், வாழ்க்கையானது அனேக மாறுதல்களை தொடர்ந்து எதிர்கொள்கிறதாக இருக்கிறது. நாட்கள் செல்லச்செல்ல நாம் ஞானத்தில் இனிமையாக வளருகிறோம் அல்லது மதியீனத்தில் வளருகிறோம். நாம் எதில் வளருகிறோம் என்பதை ஆராய்ந்துப்பார்ப்போம்.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக்கோபு 1:5). இந்த வசனத்தைக் குறிப்பிட்டு நம் வீட்டில் உள்ள சிறு பிள்ளைகளை தேவனிடம் ஞானத்தைக் கேட்கும்படி நாம் உற்சாகப்படுத்துவதுண்டு. நம் வயது மற்றும் அனுபவம் என்னவாக இருந்தாலும், நாமனைவருக்கும் ஞானம் தேவை என்பதை நாம் மறந்துவிடுகிறோம். ஞானத்தை நாடிக் கேட்கிற எவருக்கும் அதைக் கொடுக்க தேவன் விரும்புகிறார். அவருடைய ஞானத்தை நமக்குத் தரும்படி நாம் தேவனிடம் கேட்க ஆயத்தமாக இருக்கிறோமா? இயேசுகிறிஸ்துவே நமது ஞானம் என்பதை நாம் நினைவில்கொள்வோம் (1கொரிந்தியர் 1:28-31). தேவனுடைய ஞானத்தைப் பெறும்படி அவர் நம்மைத் தெரிந்தெடுத்து அழைத்தும் இருக்கிறார். நாம் நமக்குள் இருக்கிற விசுவாசத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்தி, தேவபக்திக்கேதுவான ஞானத்துடன் வாழ்வோமாக.

**- அற்புதராஜ் சாமுவேல், பெங்களூர்.**



**பரிசுத்த வேதாகமமானது முழு மனுக்குலத்துக்கும் ஆறுதலளிக்கும் மிகச் சிறந்த புத்தகம். – எர்னஸ்ட் ரீனன்**

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.
உலகின் பல பகுதிகளிலும் வெடித்துச் சிதறும் மோதல்கள் குறித்த தினசரிச் செய்திகள் நம் இதயங்களை கனமாக்குகின்றன. இந்த வெளிப்படையான போர்கள் வருத்தமளிப்பவையாகவும் கண்ணுக்குத் தெரிபவையாகவும் இருப்பினும், அவை நமக்கு கண்ணுக்குத் தெரியாத, தொடர்ந்து நடைபெறும் தனிப்பட்ட ஒரு ஆவிக்குரிய போரை நினைவூட்டுகின்றன.

**போர் என்பது உண்மையானது:** எந்த ஒரு நாடும் போர்கள் இல்லாமல் முழுமையாக விலக்கிப் பாதுகாக்கப்படாதது போலவே, எந்த விசுவாசியும் ஆன்மீக யுத்ததிலிருந்து விலக்கு பெற்றவர் அல்ல. எபேசியர் 6:12ல் பவுல் அப்போஸ்தலன் நினைவூட்டுவது போல், "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." ஒவ்வொரு விசுவாசியும் மனிதர்களுக்கு எதிராக அல்ல, ஆனால் அகந்தை, பயம், பாவம் மற்றும் சோதனைகளுக்கு எதிராக தினசரி போராட்டத்தில் உள்ளனர். உலகப் போர்கள் அவ்வப்போது நடக்கலாம், ஆனால் ஆன்மீகப் போர் என்பது நிரந்தரமானது. அது சிறிய கவனச் சிதறல்கள், சோர்வுகள் மற்றும் நமது சொந்த எண்ணங்கள் வழியாகவும் வரலாம்.

**சரியான ஆயுதங்கள் தேவை:** உலகில் போர்களில் வெற்றி என்பது ஒரு நாட்டின் உத்தி, பலம் மற்றும் ஆயுதங்களைப் பொறுத்தது. ஆவிக்குரிய உலகில், நமது ஆயுதங்கள் உடல் சார்ந்தவை அல்ல. 2 கொரிந்தியர் 10:4, "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது." என நினைவூட்டுகிறது. தேவன் ஏற்கனவே நமக்குத் தேவையான சர்வ ஆயுதங்களையும் கொடுத்துள்ளார்: சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசமென்னும் கேடகம், இரட்சண்யமென்னும் தலைச்சீரா, தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் மற்றும் ஜெபம் (எபேசியர் 6:13–18). ஆவிக்குரிய வெற்றி மனித ஞானத்திலிருந்து வருவதில்லை, ஆனால் தொடர் ஜெபம், வேதாகம வாசிப்பு & தியானம் மற்றும் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பதன் மூலமே அது வருகிறது.

**கிறிஸ்துவில் வெற்றி உறுதி:** உலகத்தில் போர்களின் முடிவுகள் நிச்சயமற்றவை, ஆனால் நமது ஆன்மீகப் போரில் இயேசுகிறிஸ்துவின் மூலம் ஏற்கனவே வென்றுவிட்டோம். சிலுவையில் இயேசு "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்." (கொலோ. 2:15). நமது எதிரி இன்னும் நம்மைத் தாக்குகிறான், ஆனால் அவன் தோற்கடிக்கப்பட்டவன். "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." (ரோமர் 8:37). இந்த உண்மை நமக்கு நம்பிக்கையைத் தருகிறது.

இந்த நம்பிக்கை இந்தக் குழப்பமான காலங்களில் நம்மை உறுதியாக, மகிழ்ச்சியாக மற்றும் கவனத்துடன் தொடர்ந்து ஓட வைக்கட்டும். இந்த நாட்களில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்காக நாம் ஜெபிப்போம்; அதேநேரத்தில் தேவன் நம்மை உறுதியாக நிற்க அழைக்கும் ஆவிக்குரிய போர்க்களங்களுக்கான நம் சொந்த வாழ்க்கையையும் ஆராய்ந்து பார்ப்போம்.

2025–26 கல்வியாண்டிற்கான சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் (CBRC) ஜூன் 16, 2025 முதல் துவங்கப்பட்டுள்ளன. 150க்கும் மேற்பட்ட பள்ளிசெல்லும் மாணவர்கள் இந்தக் குழுக்களில் இணைந்துள்ளனர். மாதாந்திர GODependence கருத்தரங்குகள் இந்தமாதம் முதல் திட்டமிட்டபடி மீண்டும் தொடங்கப்படுகின்றன. இந்த வருடத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள ஊழிய நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்காகவும் எவ்வித தடையில்லாமலும் நடைபெற வேண்டுமென்று உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

இந்த GODependence செய்திமடல் குறித்த உங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பக்கம் 4-ல் கொடுக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு இணைப்பின் மூலம் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - ஜூன் 2025

**துதிப்போம்:**

1. 2025 மே மாத இறுதியில் பல தடைகளையும் தாண்டி வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காக.
2. இத்துடன் 8 மாதங்கள் GODependence செய்தி மடல் தவறாமல் வெளிவர தேவன் தயவு பாராட்டியதற்காக.
3. நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இம்மட்டும் கொடுத்திருக்கிற ஜீவன், சுகம் மற்றும் பெலனுக்காக.
4. இந்த மாதம் GODependence ஊழியத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் காரியங்களுக்காக.
5. 10 மொழிகளில் 6 கால அளவுகளில் நடைபெற்று வரும் நமது வேதவாசிப்புச் சவால் குழுக்களுக்காக.

**ஜெபிப்போம்:**

1. 2025 ஜூன் மாத வேதவாசிப்பு குழுவில் இணைந்து இருப்பவர்களுக்காக. அநேகர் ஜூன் மாதத்தில் வேதவாசிப்பை நிறைவு செய்ய. ஒரு சில காரணங்களினால் வேதவாசிப்பில் பின்தங்கி இருப்பவர்களும் வாசித்து முடிக்க.
2. புதிய கல்வி ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் பிள்ளைகளுக்காக. ஆண்டவர் அவர்களுக்கு விசேஷித்த ஞானம் தரவும் / படிப்பில் சிறந்து விளங்க.
3. 16 ஜூன் 2025 அன்று துவங்கப்பட்டுள்ள சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்களுக்காக. அதில் அநேக பிள்ளைகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வர.
4. வரும் மாதங்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள GODependence Talk show நிகழ்வுகளுக்காக. அவை பலருக்கும் பிரயோஜனமாக காணப்பட.
5. எல்லா தடைகளையும் கடந்து வேத தியான குழுக்கள் 2025 ஜூலை மாதத்தில் ஆரம்பமாக; அதன் ஆயத்தங்களுக்காக

**பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளை வாசிப்பதினால் மட்டுமல்ல, அவைகளை ஆராய்ந்து பார்த்து தேவனுடைய வார்த்தையை விலையேறப்பெற்ற பொக்கிஷமாக கருதுகிறோம். - ஹென்றி B. ஐரிங்**



# தலைவர்கள் வீழ்ச்சி-ஏன்?





பெரிய ஆவிக்குரிய தலைவர்கள், பரிசுத்தவான்கள் என்று கருதப்பட்டவர்கள் கூட திடீரென விழுந்து போவது ஏன்?

மிகப் பெரிய தேவ மனிதர்கள் பலரின் திடீர் விழுகை உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. "இப்படிபட்ட ஒரு பெரிய தேவ மனிதன் எப்படி விழக்கூடும்?" என்பதே நம்மை குழப்பமடையச் செய்யும் கேள்வியாயிருக்கிறது.இதற்கான பதில் தனித்தன்மை வாய்ந்தது.

ஒரு மனிதனின் ஆவிக்குரிய பெலன் அவனுடைய மனதின் பெலனைப் பொறுத்ததாகவும், அவனுடைய மனபலத்துடன் நேரடியாக சம்பந்தமுள்ளதாகவும் இருக்கிறது. ஒரு நபர் ஊக்கமான ஜெபவீரராகவும் வல்லமையான அற்புதங்களைச் செய்கிறவராகவும் அக்கினிமயமான எழுப்புதலை கொண்டு வருகிறவராகவும், ஆத்துமாவை ஊடுருவிச் செல்லுகிற ஆவிக்குரிய செய்திகளை அளிப்பவராகவும், ஆவிக்குரிய பிரகாரமாக பல தாலந்துகளை உடையவராகவும் இருக்கக்கூடும். ஆனால் அவர் தன்னுடைய மனதை அடக்கி ஆளக் கற்றிராதபட்சத்தில், சந்தர்ப்பம் எழும்போது அவர் விழுந்து போக ஏதுவுண்டு. ஆகவே உண்மையில் மனதுதான் முக்கியமாக கவனம் செலுத்தப்படவேண்டிய ஒன்றாகும். "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்"( நீதி.25:28) என்று வேத வாக்கியம் கூறுகிறது.

இயல்பாக நம்மிலுள்ள திறன்கள் அனைத்தும் நம் மனதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. நாம் எவ்விதம் இருக்கிறோம் என்பதையும் நம்முடைய மனநிலையே தீர்மானிக்கிறது. இவ்வாறிருக்கிற படியினால் நம்முடைய மனதைக் கைப்பற்றிக் கொள்ள சாத்தான் ஊக்கத்துடனும் விடாப்பிடியாகவும் பிரயாசப்படுகிறான் என்பதில் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லையே! தனக்கொப்புவிக்கப் பட்டிருக்கிற மந்தைக்கு உண்மையான மேய்ப்பனாகத் திகழ்ந்த அப்.பவுல், "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (2கொரி.11:3)என்று கூறுகிறார்.

ஒரு தேவமனிதன் விழுந்து போவதற்கு வெகுகாலத்துக்கு முன்னரே அவருடைய மனதில் விழுகை சம்பவித்திருக்க வேண்டும்-உலகிலுள்ள ஒருவருமே அதை அறியாதிருக்கக் கூடும்.

பிரகாசிக்கிற பரிசுத்தவான்கள் ஆகாய மண்டலத்திலுள்ள நட்சத்திரங்களைப் போல இருக்கிறார்கள் என்று வேத வசனம் கூறுகிறது (தானி.12:3). நட்சத்திரங்கள் பூமியிலிருந்து வெகு தொலைவில் உள்ளன என்று நாம் அறிவோம். அவற்றின் ஒளி பூமியை வந்தெட்டுவதற்கு 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஒளி ஆண்டுகள் ஆகும்(ஒளியின் திசை வேகம் 300000 கி.மீ/வினாடி). ஒரு நட்சத்திரம் பூமியிலிருந்து 4 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்குமாயின், நான்கு ஒளி வருடங்களுக்கு முன் அந்த நட்சத்திரம் கொடுத்த ஒளியானது இப்பொழுதுதான் பூமிக்கு வந்து சேரும். பிரகாசிக்கிற பரிசுத்தவான்களும் அவைகளைப் போன்றவர்களே.

இன்று வல்லமையாக பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஒரு பெரிய பரிசுத்தவான் நான்கு வருடங்களுக்கு முன்பே கிருபையினின்று விழுந்து போயிருக்கக் கூடும். ஒரு நட்சத்திரம் 4 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருப்பது போல, அவர் ஆவிக்குரிய பிரகாரமாக ஆகாய மண்டலங்களில் அவ்வளவு உயரமான இடத்தில் இருந்தபடியால், அவருடைய ஒளியை நாம் இன்று காண்கிறோம்.ஆனால் நாளைய தினம் திடீரென்று அந்த ஒளி மறைந்து விடுகிறது. ஒரு நட்சத்திரம் நான்கு ஒளியாண்டுகளுக்கு முன் ஒளியிழந்து, கறுத்து போயிருக்கக்கூடும்.

ஆனால் இன்று (அதாவது நான்கு ஒளி ஆண்டுகள் கழித்து) இப்பூமியில் வசிக்கும் ஒருவரும் அதை அறியாமலிருக்கலாம். இன்றுவரை அதின் ஒளி பூமியை வந்தெட்டிக் கொண்டுதான் இருந்திருக்கும்! ஒரு தேவமனிதன் விழும்போது ஜனங்கள் "அந்த பெரிய ஆவிக்குரிய தலைவருக்கு திடீரென்று என்ன சம்பவித்தது?" என்று அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைகிறார்கள். நிச்சயமாக அது ஒரு திடீர் வீழ்ச்சி அல்ல. ஒரு தேவமனிதன் விழுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, அவருடைய மனதில் விழுகை சம்பவித்திருக்கும். இது சரித்திரப் பூர்வமாகவும் இன்று நடைமுறையிலும் மெய்யானதாகவே இருக்கிறது. ஆவிக்குரிய தலைவர்கள் என்று அறியப்பட்டிருந்து, பின்பு கிருபையினின்று விழுந்துபோன பலரும் வெகு காலத்துக்கு முன்னரே தங்கள் வாழ்க்கையில் ஒரு இரகசியமான விழுகை சம்பவித்திருந்தது என்பதைத் தங்களுக்கு வெளியரங்கமான விழுகை சம்பவித்த பின்னர் தெரிவித்திருக்கின்றனர்.



நீங்கள் மனப்பாடமாக கற்றுக்கொண்ட வேதாகம வசனங்களை யாராலும் உங்களிடமிருந்து பறித்துக் கொள்ள முடியாது. - கோரி டென் பூம்

வல்லமையாக பயன்படுத்தப்படும் தேவ மனிதர்கள் சிலருக்கு ஏற்படும் அபாயம் என்னவெனில், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறுசிறு தவறுகளுண்டாகும்போது, அதற்காக சரியாக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி அவற்றை அறிக்கைசெய்து விட்டுவிடாமல், அவற்றை மறைக்க முனைந்து தாங்கள் மேன்மை பொருந்திய தேவ மனிதர் என்றும், ஆதலால் மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்வதும் மனந்திரும்புவதும் தங்கள் கௌரவத்திற்கு தாழ்வானது என்று நினைப்பதேயாகும். அதைத் தொடர்ந்து, தவறான நோக்கத்தோடு ஒருவரைத் தொடுதல், அருவருக்கத்தக்க படங்களை ஒரு நிமிடம் பார்த்தல் போன்ற இன்னுமதிகமான சிறிய இரகசிய பாவங்கள் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிபிடித்துக்கொள்கின்றன. இவை ஆரம்பத்தில் ஒரு நபரின் ஊழியத்தை உடனடியாக பாதிக்காமலிருக்கலாம். ஆனால் இவை பிற்பாடு அந்த நபருடைய வாழ்க்கையையும் ஊழியத்தையும் அழித்துவிடும்.

ஒரு நபர்மீது நீங்கள் கொஞ்சம் தண்ணீர் ஊற்றலாம்; அது அவரை கொன்று போடுவதில்லை. நீங்கள் அவர்மீது கொஞ்சம் வைக்கோலை வீசலாம்; அதுவுங்கூட அவரைக் கொல்லாது. அவர்மீது கொஞ்சம் மணலை நீங்கள் எறியக் கூடும்; அதுவுங்கூட அவரை கொல்லாமலிருக்கக்கூடும். ஆனால் மணலையும், வைக்கோலையும், தண்ணீரையும் ஒன்றாக உபயோகித்து ஒரு செங்கல் செய்து, அதை ஒரு நபரின் மீது எறிந்தால், அது அவரை கொன்றுபோடக்கூடும். நம்முடைய மிகச் சிறிய, சொற்பமான இரகசிய பாவங்களும் அப்படியே இருக்கின்றன. நாம் கவனமாயிருப்போமாக! களங்கமற்றதுபோல் தொனிக்கும் சாத்தானின் சத்தத்தை நாம் சந்தேகப்படாமல் கேட்க ஆரம்பிக்கும்போது, அவன் நம்முடைய வாழ்க்கையில் புக, அடியெடுத்து வைக்க நாம் இடமளிக்கிறோம். அவன் முதலாவது நம்மை வஞ்சித்து, பின்பு நம்முடைய மனதைக் கெடுத்து, தீட்டுப்படுத்தி, முடிவாக அதைக் குருடாக்குகிறான்(2கொரி.4:4). அதற்குப்பின் நாம் எந்தவொரு பாவத்தையும் செய்ய தைரியமுள்ளவர்களாகிறோம். இதுவே கபடமற்ற ஏவாளுக்கு அவன் வைத்த கண்ணியாகும்.

விலக்கப்பட்ட விருட்சத்தின் கனி உண்மையிலேயே புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமானதும், அவளுடைய புத்தியை தெளிவிக்கிறதுமான ஒன்று என்று சிந்திக்கும் வகையில் அவள் முதலாவது வஞ்சிக்கப்பட்டாள்(ஆதி.3:6). பின்பு, தங்களை நேசித்து, தங்களோடு ஒவ்வொரு நாளும் நடந்து சம்பாஷித்து வந்த தேவன் தங்களுக்கு நல்லதும் விரும்பப் படத்தக்கதுமான ஏதோ ஒன்றை வேண்டுமென்றே கொடாமல் விலக்கிவைத்துக் கொண்டதாக எளிதாக நம்பும்படி அவள் வழி நடத்தப்பட்டாள். தன் தேவன் மேல் அவள் கொண்டிருந்த மாயமற்ற அன்பு போய்விட்டது- அவளுடைய மனது கெடுக்கப்பட்டுவிட்டது. அதற்குப்பின், கனியைப் புசிக்க அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அப்படிப்பட்ட நேரடியான கீழ்ப்படியாமையினால் உண்டாகக் கூடிய பின்விளைவுகளைக் குறித்து அவள் பயப்படவில்லை. அந்த அளவுக்கு அவளுடைய மனது குருடாக்கப் பட்டிருந்தது.

நாம் இப்படிப்பட்ட மனநிலையை அடையும் போது, எவ்வளவதிகமான ஆலோசனைகளும், ஊக்குவிப்புகளும், புத்திமதிகளும், சிட்சைகளும் அளிக்கப்பட்டாலும் அவற்றுள் யாதொன்றினாலும் நம்முடைய உணர்ச்சியற்ற, மரத்துப்போன நிலையினின்று நம்மை தூக்கியெடுக்கமுடியாது; நம்முடைய அன்புள்ள கர்த்தரால் நமக்கென்று ஆயத்தமாக்கப்பட்டுள்ள மகிமையானவைகளோ அல்லது முரட்டாட்டம்பண்ணுகிறவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள வரப்போகும் நியாயத்தீர்ப்பையோ நம்மால் காணக்கூடாமற் போகக்கூடும்.

இந்தக் கட்டுரை விழுந்து போனவர்களுக்கு மட்டுமல்ல, இதை வாசிக்கிறவர்களுக்கும்கூட ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்.

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே
தேவனுடைய சித்தமாயிருக்கிறது. *(I தெச. 4:3)*

**- பெந்தெகொஸ்தே பேரொலி**


**அன்புள்ள வாசகரே,**

## GODependence செய்திமடல் பற்றிய கருத்துக் கணிப்பு

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் உங்களுக்கு எம் அன்பின் வாழ்த்துதல்கள்!

கடந்த 8 மாதங்களாக (இந்த மாதம் உட்பட), GODependence செய்திமடல் முறையான பைபிள் வாசிப்பை ஊக்குவிப்பதற்கும், துதிக் குறிப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், ஜெபம் மற்றும் சாட்சிகள் மூலம் நமது ஐக்கியத்தை பலப்படுத்துவதற்கும் ஒரு தாழ்மையான முயற்சியாக இருந்து வருகிறது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, நாங்கள் இந்த செய்திமடலை மேம்படுத்த விரும்புகிறோம் - **உங்கள் கருத்து எங்களுக்கு மிகவும் முக்கியமானது**. இந்த சிறிய கருத்துக்கணிப்பு உங்கள் நேரத்தின் ஒரு சில நிமிடங்களை மட்டுமே எடுத்துக்கொள்ளும், ஆனால் வரும் நாட்களில் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் சிறப்பாக சேவை செய்ய இது எங்களுக்கு உதவும்.

நீங்கள் ஒரு வழக்கமான வாசகராக இருந்தாலும் அல்லது இப்போதுதான் வாசிக்கத் தொடங்கினாலும், உங்கள் நேர்மையான எண்ணங்கள், பரிந்துரைகள் மற்றும் ஊக்கம் எங்களை முன்னோக்கி வழிநடத்தும்.

நீங்கள் உங்கள் அடையாளத்தைக் குறிப்பிடாமலேயே கூட, இங்கே கொடுக்கப்பட்ட இணைப்பில் பதிலளிக்கலாம்: https://forms.gle/nkzaJvD7rBrYahKW9

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இருப்பதற்கு நன்றி. தொடர்ந்து நாம் தேவனைச் சார்ந்து நிற்போம்!

கிறிஸ்துவின் அன்பில்,

CLICK HERE https://forms.gle/nkzaJvD7rBrYahKW9

**ஆசிரியர் குழு**
GODependence செய்திமடல்.


**வேதாகமத்தின் வெளிச்சம் உங்கள் வெளிச்சமாக இருக்கட்டும், அப்போது நீங்கள் பிளாட்டோவை விட ஞானியாக ஆவீர்கள். - சார்லஸ் ஸ்பர்ஜன்**

# GODependence வேதவாசிப்பு சவால்

📕 **வேதவாசிப்பு சவால்கள் - 01 ஜூலை 2025 முதல்**📕

""மறைந்திருக்கும் புதையலைத்தேடி தோண்டுகிற மனிதர்களைப் போல நாம் நம்முடைய வேதாகமத்தை வாசிக்க வேண்டும்." – ஜே.சி. ரைல். உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.




**நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👩‍🦰♀️ "2025 ஆம் ஆண்டில் இதுவரை நான் மூன்று முறை வேதத்தை வாசித்து முடித்துவிட்டேன். தங்களது GODependence வேதவாசிப்பு சவால் குழுவில் இணைந்து, குறிப்பிட்ட நாட்களுக்குள் வேதத்தை முடிக்க வேண்டும் என்று தீர்மானித்து வாசிக்கும்பொழுது, நான் தேவையில்லாத உலக கவலைகளைப் பற்றி யோசிக்காமல், அதிக நேரம் என் வேதத்தோடு செலவிட்டேன்." - Mano Magdalene Ramkumar

👨‍🦰♂️ "நான் இப்போது முதல் முறையாக எனது வேதாகம வாசிப்பை முடித்துள்ளேன், இதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எனக்கு நேரம் குறைவாக 2 மாதங்களே இருந்தன, ஆனால் தேவனுடைய கிருபையால் நான் ஒரே முயற்சியில் எனது வேதாகம வாசிப்பை முடித்து விட்டேன். நீங்கள் ஒரு சிறந்த பணியை செய்கிறீர்கள்." - Akash Kumar Agarwal

👩‍🦰♀️"இந்த GODependence வேதாகம வாசிப்பு சவால் மிகவும் நல்லதொரு திட்டமாகவும் மற்றும் தினமும் வேதாகமத்தை வாசிக்க, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நெருக்கமாக இருக்க எனக்கு மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது." - Sivalakshmi

👩‍🦰♀️ "இந்த GODependence வேதாகம வாசிப்பு சவால் மிகவும் நல்லதொரு திட்டமாகவும் மற்றும் தினமும் வேதாகமத்தை வாசிக்க, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நெருக்கமாக இருக்க எனக்கு மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது." - Sivalakshmi

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 ஜூலை 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

.**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✴ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✴ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✴ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✴ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✴ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு காலஅளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

CLICK HERE **https://wa.me/96565962559**

:- **GODependence குழு**

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!



**தேவனுடைய வார்த்தை எனும் நங்கூரத்திலிருந்து நாம் துண்டிக்கப்படுவோமெனில், நாம் விடுதலையைப் பெறமாட்டோம். மாறாக, நாம் நமது தனிப்பட்ட உணர்வுகளுக்கும் உலகின் பிரபலமான போக்குகளுக்கும் அடிமைகளாகிவிடுவோம். - ஜான் பைபர்**

**வேதப்பகுதி: 2 கொரிந்தியர்**

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 8

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

QUIZ!

### வார்த்தைவிளையாட்டு

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ 1 | ஆ 2 | இ 3 | ஈ 4 | உ 5 | ஊ 6 | எ 7 | ஏ 8 | ஐ 9 | ஒ 10 | ஓ 11 | ஔ 12 | ஃ 13 |
| க 14 | கா 15 | கி 16 | கீ 17 | கு 18 | கூ 19 | கெ 20 | கே 21 | கை 22 | கொ 23 | கோ 24 | கௌ 25 | க் 26 |
| ங 27 | ஙா 28 | ஙி 29 | ஙீ 30 | ஙு 31 | ஙூ 32 | ஙெ 33 | ஙே 34 | ஙை 35 | ஙொ 36 | ஙோ 37 | ஙௌ 38 | ங் 39 |
| ச 40 | சா 41 | சி 42 | சீ 43 | சு 44 | சூ 45 | செ 46 | சே 47 | சை 48 | சொ 49 | சோ 50 | சௌ 51 | ச் 52 |
| ஞ 53 | ஞா 54 | ஞி 55 | ஞீ 56 | ஞு 57 | ஞூ 58 | ஞெ 59 | ஞே 60 | ஞை 61 | ஞொ 62 | ஞோ 63 | ஞௌ 64 | ஞ் 65 |
| ட 66 | டா 67 | டி 68 | டீ 69 | டு 70 | டூ 71 | டெ 72 | டே 73 | டை 74 | டொ 75 | டோ 76 | டௌ 77 | ட் 78 |
| ண 79 | ணா 80 | ணி 81 | ணீ 82 | ணு 83 | ணூ 84 | ணெ 85 | ணே 86 | ணை 87 | ணொ 88 | ணோ 89 | ணௌ 90 | ண் 91 |
| த 92 | தா 93 | தி 94 | தீ 95 | து 96 | தூ 97 | தெ 98 | தே 99 | தை 100 | தொ 101 | தோ 102 | தௌ 103 | த் 104 |
| ந 105 | நா 106 | நி 107 | நீ 108 | நு 109 | நூ 110 | நெ 111 | நே 112 | நை 113 | நொ 114 | நோ 115 | நௌ 116 | ந் 117 |
| ப 118 | பா 119 | பி 120 | பீ 121 | பு 122 | பூ 123 | பெ 124 | பே 125 | பை 126 | பொ 127 | போ 128 | பௌ 129 | ப் 130 |
| ம 131 | மா 132 | மி 133 | மீ 134 | மு 135 | மூ 136 | மெ 137 | மே 138 | மை 139 | மொ 140 | மோ 141 | மௌ 142 | ம் 143 |
| ய 144 | யா 145 | யி 146 | யீ 147 | யு 148 | யூ 149 | யெ 150 | யே 151 | யை 152 | யொ 153 | யோ 154 | யௌ 155 | ய் 156 |
| ர 157 | ரா 158 | ரி 159 | ரீ 160 | ரு 161 | ரூ 162 | ரெ 163 | ரே 164 | ரை 165 | ரொ 166 | ரோ 167 | ரௌ 168 | ர் 169 |
| ல 170 | லா 171 | லி 172 | லீ 173 | லு 174 | லூ 175 | லெ 176 | லே 177 | லை 178 | லொ 179 | லோ 180 | லௌ 181 | ல் 182 |
| வ 183 | வா 184 | வி 185 | வீ 186 | வு 187 | வூ 188 | வெ 189 | வே 190 | வை 191 | வொ 192 | வோ 193 | வௌ 194 | வ் 195 |
| ழ 196 | ழா 197 | ழி 198 | ழீ 199 | ழு 200 | ழூ 201 | ழெ 202 | ழே 203 | ழை 204 | ழொ 205 | ழோ 206 | ழௌ 207 | ழ் 208 |
| ள 209 | ளா 210 | ளி 211 | ளீ 212 | ளு 213 | ளூ 214 | ளெ 215 | ளே 216 | ளை 217 | ளொ 218 | ளோ 219 | ளௌ 220 | ள் 221 |
| ற 222 | றா 223 | றி 224 | றீ 225 | று 226 | றூ 227 | றெ 228 | றே 229 | றை 230 | றொ 231 | றோ 232 | றௌ 233 | ற் 234 |
| ன 235 | னா 236 | னி 237 | னீ 238 | னு 239 | னூ 240 | னெ 241 | னே 242 | னை 243 | னொ 244 | னோ 245 | னௌ 246 | ன் 247 |
| ஷ 248 | ஸ 249 | ஜ 250 | ஹ 251 | க்ஷ 252 | ஷ் 253 | ஸ் 254 | ஜ் 255 | ஹ் 256 | க்ஷ் 257 | ஸ்ரீ 258 | ஜி 259 | ஹி 259 |

### கொடுக்கப்பட்டுள்ள எண்களைக் கொண்டு வேதாகம வசனத்தைக் கண்டுபிடி

எண்களைக் கொண்டு வசனத்தை கண்டுபிடித்து வசனம் அதிகாரத்துடன் சொல்லவும்

எடுத்துக்காட்டு:-
14,169,104,92,169. 105,182,170,183,169, 1,183,169, 16,161,126, 7,247,226,135,221,209,96 — கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது

1). 106,143 92,159,42,104,96 105,66,184,131,182
185,44,184,42,104,96 105,66,26,16,232,143

2). 7,247 16,161,126 5,235,26,18,130, 128,96,143
118,170,186,235,104,94,177 7,247 118,170,143
123,157,79,132,156 185,209,39,18,143

3). 15,79,130,118,70,16,222,191,14,221
1,107,104,94,144,132,235,191,14,221
15,79,130,118,67,92,191,14,219
107,104,94,144,132,235,191,14,221

4). 14,169,104,92,164 2,185,145,235,183,169
14,169,104,92,161,74,144 2,185 7,39,21,154 1,39,21
185,70,92 178,148,135,91,70

5). 3,117,92,130 127,26,16,248,104,100
131,91,119,91,66,39,14,211,182
124,234,224,161,26,16,232,143

6). 5,234,41,14,132,156,26
23,70,26,14,222,183,237,66,104,94,182 99,183,247
120,159,144,132,146,61,26,16,223,169

7). 119,183,143 1,224,145,92 1,183,165
105,131,26,15,14 119,183,132,26,16,236,169

8). 138,247,139 119,158,78,70,16,222,183,247
14,169,104,92,165,26,18,224,104,99 138,247,139
119,158,78,66,26,14,66,183,247

9). 99,183,239,74,144
184,26,18,104,92,104,92,39,14,215,182,171,143
3,151,44,16,224,254,96,187,26,18,221 2,143 7,247,226,14
1,83,161,26,18,221 2,137,247 7,247,226,143
3,161,26,16,222,99

10). 10,161,183,247
16,224,254,96,187,26,18,221,211,161,117,93,182
122,96,52,42,161,257,68,145,146,161,26,16,223,247,
118,204,144,191,14,221 10,198,117,96,128,146,235
7,182,171,143 122,94,93,146,235,

CLICK HERE https://forms.gle/kRpMAKviwUT3SXfA6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 26/06/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

JOIN NOW!

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்
அற்புதராஜ் சாமுவேல்
ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
ஏ. ஆர். பீட்டர்
டெ. டென்சிங்
டார்வின் நேசகுமார் அ
ஷோபா தானியேல்
ஜோசஃபீன் ஷைனி பால்
கேதரின் சுஜி

### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல்
1K சந்தாதாரர்களையும்
250 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

நாம் உயிர்வாழ்வதற்கு சுவாசிப்பது எவ்வளவு அவசியமானதோ அதே போல நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமம் அவசியமானது. நம் வாழ்க்கைக்கு தேவனுடைய வார்த்தையை விட மிகவும் அத்தியாவசியமானது என்று எதுவும் இல்லை. - ஜாக் W. ஹேவர்ட் - Jack W. Hayford

## சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் 2025–26 – ஜூன் 16, 2025 முதல்

*""பரிசுத்த வேதாகமமானது ஒரு சிறு குழந்தையும் வாசிப்பதற்கு எளிமையானதும், அதே சமயத்தில் ஒரு அறிஞர் முழுமையாக கற்றுத் தேர்ச்சியடைய முடியாதபடிக்கு மிகவும் ஆழமானதாகவும் இருக்கிறது." பெயர் தெரியவில்லை.*

**பிரியமான பெற்றோர்களே!**

📕 ✨ புதிய கல்வியாண்டு 2025–26 தொடங்கி விட்டது…

(13 வயது வரை உள்ள) உங்கள் குழந்தை பரிசுத்த வேதாகமம் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டு, தேவனை அறிந்துகொண்டு, ஞானமும் பெற – படிப்பிலும் வாழ்க்கையிலும் சிறப்பாக விளங்க விரும்புகிறீர்களா?

ஒவ்வொரு நாளும் உங்கள் குழந்தைக்கு ஒரு ஆவிக்குரிய அடித்தளத்தை உருவாக்க ஒரு எளிய மற்றும் மகிழ்ச்சியான ஒரு வழிமுறையாக "சிறுவர் வேதவாசிப்புச் சவால்கள் 2025–26" -ல் சேரவும்!

**இதன் சிறப்பம்சங்கள்:**

✅ வளரும் இளஞ் சிறுவர்களுக்கு ஏற்ற வேதவாசிப்புப் பகுதிகள்
✅ கல்வியாண்டில் பள்ளி நாட்களுடன் இசைந்த வேத வாசிப்பு
✅ முறையான வேத வசன மனப்பாடப் பயிற்சி மற்றும் ஒப்பித்தல்
✅ வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள்
✅ 8 முதல் 13 வயது வரையிலான சிறுவர்கள் எவரும் சேரலாம்
✅ வேதம் வாசிக்க விரும்பும் 8 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கும் அனுமதி

👉 இங்கே https://wa.me/96565962559 கிளிக் செய்து சிறுவர் வேதவாசிப்புப் சவால் 2025–26-ல் இணையலாம்.

அதில் பின்வரும் விவரங்களை எங்களுக்கு அனுப்பவும்:
1. குழந்தையின் பெயர்
2. வயது
3. பிறந்த தேதி
4. விருப்பமான மொழி குழு: ஆங்கிலம் அல்லது தமிழ்




CLICK HERE **https://wa.me/96565962559** REGISTER NOW!

*வாருங்கள்… தேவனுடைய வார்த்தையில் வேரூன்றிய ஒரு தலைமுறையை உருவாக்குவோம்!*

– GODependence குழு
+96565962559

*** ☝️ இந்த செய்தியை உங்கள் உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்… இதனால் அவர்களின் பிள்ளைகளும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!



நம் ஜெபங்களை, வேதவாசிப்பை, நாம் நேரத்தை பயன்படுத்தும் முறையை, மற்றும் நம் இரட்சிப்பை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் நண்பர்களை நாம் தேடிக்கண்டடைவோமாக.
- ஜே.சி.ரைல்




## நிலையான திருமணத்தின் ரகசியத்தை பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்துகிறது

தம்பதிகளின் துரோகம் திருமண முறிவுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். திருமணமான தம்பதிகள் திருமணத்திற்குப் புறம்பான உறவுகளை வைத்துக் கொள்வதற்கு எதிராக பரிசுத்த வேதாகமம் கடுமையாக எச்சரிக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள சில எச்சரிக்கைகள் இவை:

- "தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக்கூடுமோ? தன் கால் சுடாமல் எவனாவது தழலின்மேல் நடக்கக்கூடுமோ? பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும், ஆக்கினைக்குத் தப்பான்.(நீதிமொழிகள் 6:27-29).
- "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்." (எபிரெயர் 13:4).

குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இந்த ஞானம் நவீன உளவியல் மற்றும் ஆலோசனையின் வளர்ச்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டது.

வெற்றிகரமான திருமண வாழ்க்கையை நடத்த பரிசுத்த வேதாகமத்தை வாசித்து அதன் சத்தியங்களுக்குக் கீழ்ப்படிந்து செல்லுங்கள்.













---

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 7 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 7 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 7

➡️ இடமிருந்து வலம்
21. தீமோத்தேயு (4:17)
7. கிரேக்கர் (1:22)

⬇️மேலிருந்து கீழ்
1. தீர்க்கதரிசிகள் (12:28)
2. தேவகிருபை (1:6)
3. ஆவிக்குரியவன் (2:15)
4. யூதர்கள் (1:22)
5. அஸ்திபாரம் (3:11)
6. சரீரம் (12:20)

⬆️கீழிருந்து மேல்
18. தூதர்கள் (11:10)
12. வேஷம் (7:31)
14. கிறிஸ்து (3:23)
15. ஆதாம் (15:45)

⬅️ வலமிருந்து இடம்
9. சாதுரியஞானம் (1:17)
10. பாவம் (15:56)
11. அன்பு (13:13)
13. குலோவேயாள் (1:11)

**சரியான பதில்களை அனுப்பிய முதல் 8 நபர்கள்:**

1. அ.ஜாய்ஸ் செல்லத்துரை
2. கிறிஸ்டி ஜோசப்
3. எஸ்.கனிச்சுவை
4. R Josephine
5. டாக்டர் தேவி தாமோதரன்.
6. P.விஜிலா
7. Raichel Amuthavalli
8. ச.மணி மாலா

**வேதப்பகுதி: 1 கொரிந்தியர்**

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 7

**கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கொண்டு 1 கொரிந்தியரில் வரும் வசனங்களை கண்டுபிடி.**

1. 1 கொரிந்தியர் 13:4-7
2. 1 கொரிந்தியர் 12:12
3. 1 கொரிந்தியர் 11:1
4. 1 கொரிந்தியர் 4:20
5. 1 கொரிந்தியர் 10:31
6. 1 கொரிந்தியர் 2:9
7. 1 கொரிந்தியர் 1:27
8. 1 கொரிந்தியர் 1:18
9. 1 கொரிந்தியர் 6:19-20
10. 1 கொரிந்தியர் 13:13

**சரியான பதில்களை அனுப்பிய 2 நபர்களின் பெயர்கள் :**

1. பி. விஜிலா
2. ச.மணி மாலா

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். இந்த வசனமானது உங்கள் விருப்பங்களை எல்லாம் தேவன் நிறைவேற்றுவார் என்பதை அல்ல, அவர் தமது விருப்பத்தை உங்கள் இருதயத்தில் விதைப்பார் என்பதைக் குறிக்கிறது. - ஜான் மெக்ஆர்தர்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

31 மே 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்




















தேவனுடைய வார்த்தையை வாசிப்பது இருதயத்திற்கு சமாதானத்தைத் தருகிறது. அதில், சகல இருளுக்குமான ஒரு வெளிச்சத்தையும், மரணத்தில் ஜீவனையும், நம் ஆண்டவர் திரும்பவும் வருவதைப் பற்றிய வாக்குத்தத்தத்தையும், மற்றும் நித்திய மகிமைக்கான நிச்சயத்தையும் நாம் கண்டுகொள்கிறோம். - டி.எல்.மூடி



# யோசேப்பு - மரியாளின் புருஷன்

## பரிசுத்த வேதாகமத்தின் பாடப்படாத நாயகன்

**(மத்தேயு 1:18–25; 2:13–14, 19–23)**



யோசேப்பு - பரிசுத்த வேதாகமத்தின் மிகச்சிறந்த ஆனால் அதிகம் கவனிக்கப்படாத கதாநாயகர்களில் ஒருவர். பிரசங்க மேடைகளில் அவர் அரிதாகவே குறிப்பிடப்பட்டாலும், அவரது அமைதியான வலிமையும் அசைக்க முடியாத கீழ்ப்படிதலும் நிறைய பேசுகின்றன.

**தேவனின் சித்தத்திற்குக் கீழ்ப்படிய யோசேப்பு நிறைய தியாகம் செய்தார்.**

திருமண கொண்டாட்டங்களின் பாரம்பரிய மகிழ்ச்சியை அவர் கைவிட்டார். அவர் ஏற்கனவே ஒரு குழந்தையை எதிர்பார்க்கும் ஒரு பெண்ணை மணந்தார் - அவருடைய சொந்த குழந்தை அல்ல. ஒரு வழக்கமான தேனிலவின் உணர்ச்சி மற்றும் உடல் மகிழ்ச்சிகளை அவர் இழந்தார். அவர் தனது மனைவியின் முதல் குழந்தையின் உயிரியல் தந்தையாக இருக்கும் உரிமையை விட்டுக்கொடுத்தார். யூத பாரம்பரியத்தின்படி, அந்தக் குழந்தைக்கு பெயரிடும் பாக்கியத்தையும் அவர் கைவிட்டார்.

திருமண வாழ்க்கையின் முதல் இரண்டு ஆண்டுகள், அவர் தனது குடும்பத்துடன் ஒரு அந்நிய தேசத்தில் வாழ்ந்தார். மேலும் அவரது வாழ்நாள் முழுவதும், திருமணத்திற்கு முன்பு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த மனிதன் என்ற களங்கத்தை அவர் அமைதியாக சுமந்தார் - உண்மை அதற்கு நேர்மாறாக இருந்தபோதிலும்.

ஆனாலும், **யோசேப்பு தனது கீழ்ப்படிதலுக்காக மகத்தான ஆசீர்வாதங்களைப் பெற்றார்.**

வரலாற்றில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணின் கணவராக ஆனார். இயேசு பிறந்த குடும்பத்தின் தலைவராக தேவனால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏரோது ராஜாவின் கோபத்திலிருந்து குழந்தை இயேசுவின் உயிரை அவரால் பாதுகாக்க முடிந்தது. ஆதிமுதல் இருக்கின்ற திரித்துவத்தின் உறுப்பினர்களில் ஒருவரான குமாரனை - தனது குழந்தையாகப் பயிற்றுவிக்க முடிந்தது. இயேசு வளர்ந்து வரும்போது அவரது அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிந்தது.

**உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற உங்கள் உரிமைகளையும் சலுகைகளையும் விட்டுக்கொடுக்க நீங்கள் தயாரா?**

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 8

**வேதப்பகுதி: 2 கொரிந்தியர்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | 3 |
| | 4 | 5 | | | | | | |
| | | ■ | 6 | 7 | | ■ | 8 | |
| ■ | | ■ | 9 | | | | ■ | |
| 10 | | 11 | | | | 12 | | |
| | | ■ | 13 | | | | | |
| | | 14 | | | | | | 15 |
| ■ | | | | 16 | | 17 | | ■ |
| 18 | | | | | | | 19 | ■ |

**➡️ இடமிருந்து வலம்**

1. தேவனுடைய சாயலாயிருப்பவர் (4)
5. கர்த்தரால் புகழப்படுகிறவன் (5)
7. தன் முகத்தின் மேல் முக்காடு போட்டுக் கொண்டவன் (2)
9. தமஸ்கு பட்டணத்து ராஜா (4)
11. சகல காரியங்களும் ______ சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும் (7)
13. ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டவன் (4)
14. லௌகிக துக்கம் உண்டாக்குவது (4)
18. சாத்தானுடைய ____ நமக்கு தெரியாதவைகள் அல்லவே (7)

**⬅️ வலமிருந்து இடம்**

2. _____ கொல்லுகிறது (4)
3. பவுலுக்கு மாம்சத்திலே கொடுக்கப்பட்டிருந்தது (2)
16. தேவனாலே அருளப்படுவது (4)
17. வலதிடது பக்கத்து ஆயுதங்கள் (2)

**⬇️ மேலிருந்து கீழ்**

1. ஸ்தோத்திரத்தினால் பெருகுவது (3)
3. கிறிஸ்துவினாலே நீக்கப்படுவது (4)
4. மக்கெதோனியா நாட்டில் சரீரத்திற்கு ____ இல்லை (7)
10. சபைகளைக் குறித்து பவுலை நெருக்கியது (3)
12. பவுல் எத்தனை தரம் கப்பற்சேதத்தில் இருந்தார் (3)

**⬆️ கீழிருந்து மேல்**

6. பவுலின் கூட்டாளி (3)
8. சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டவள் (3)
15. பவுல் மூன்று தரம் எதினால் அடிபட்டார் (3)
19. பவுல் எதிலே கல்லாதவரல்ல (4)

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

CLICK HERE https://forms.gle/z85VfjCSRFXjrJLc7

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 26/06/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**பரலோக ராஜா தனது சபையை ஆளும் செங்கோல் பரிசுத்த வேதாகமம். - ஜான் கால்வின்**

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

**இன்னும் தாமதம் ஏன்?**
**இன்றே சேருங்கள்.**

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

ஒருவர் இரட்சிக்கப்படுகிறார் அல்லது இரட்சிக்கப்படுவதாக சொல்கிறார் என்ற உண்மையின் அடிப்படையில் இயேசுவைப் பாவ இரட்சகர் என்று நம்பி நீங்கள் உங்கள் விசுவாசத்தைக் கட்டி எழுப்பவில்லை. மாறாக, ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உங்கள் விசுவாசத்தை உடையவர்களாக இருக்கிறீர்கள். இதிலே நீங்கள் உறுதியாக இருக்கிறீர்கள். - ஜான் அலெக்ஸாண்டர் டூவி

### உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.
என் பெயர் ஹெப்சி வில்லிங்டன். சொந்த ஊர் நாகர்கோவில். இப்போது ஷார்ஜாவில் வசித்து வருகிறேன். நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். என் பாட்டி சிறுவயதிலே வேதத்தை வாசிக்க சொல்லுவார்கள். அவ்வாறு பாட்டியின் தூண்டுகோலால் சிறு வயதில் காலையில் சங்கீதம் இரவில் நீதிமொழிகள் என்றும் வாசிக்க தொடங்கினேன். நாட்கள் செல்ல செல்ல வேதத்தை முழுவதும் வாசிக்க வேண்டும் என்று வாஞ்சை ஏற்பட்டது. அப்படியாக வேதத்தை நேரம் கிடைக்கும் போதெல்லாம் வாசித்தேன். கர்த்தருடைய வார்த்தை நான் சோர்ந்து போன நேரங்களில் எல்லாம் என்னை தேற்றி ஆறுதல் படுத்தினது. 2009-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. பின்னர் நான் துபாய் தேசத்திற்கு கடந்து வந்தேன்.

### நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்?

வீட்டில் தனியாக இருக்கும்போது வேதத்தை அதிகமாய் வாசித்தேன். அவ்வாறு முழு வேதாகமத்தை இரண்டு அல்லது மூன்று முறை முழு வேதாகமத்தையும் வாசித்திருப்பேன். சரியாக ஞாபகம் இல்லை. பின்னர் நாளடைவில் என் வேதாகமம் வாசிப்பில் பின்னடைவு ஏற்பட்டது. வேதாகமத்தை வாசிப்பேன் ஆனால் எப்போதாவது வாசித்து வந்தேன். ஒவ்வொரு வருடமும் New Year start ஆகும் போது, இந்த வருடம் என் ஆவிக்குரிய வாழ்க்கையில் நான் பழையபடி ஆண்டவரோடு உள்ள ஐக்கியத்தில் வளர வேதத்தை வாசிக்க வேண்டும், ஜெபம் பண்ண வேண்டும், என்றும் தீர்மானம் பண்ணுவேன். ஆனால் தோற்றுவிடுவேன். கடைசியாக, கடந்த வருடம் யாரோ எனக்கு GODependence வேதாகம வாசிப்பு அட்டவணையை New Year-க்கு முந்தின நாள் forward செய்தார்கள். அப்பொழுது நான் இந்த வருடத்தில் இதன் மூலமாக மீண்டும் எப்படியாவது வேதத்தை முழுமையாக வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் **One month Bible Reading challenge ஜனவரி 2024-ல் இணைந்து 2024 முழுவதும் 12 மாதங்களிலும் 12 முறை one month bible reading plan complete செய்ய எனக்கு கர்த்தர் கிருபை செய்தார்.**

### நீங்கள் பரிசுத்த வேதாகம வாசிக்கும் போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?

சில நேரங்களில், இந்த மாதம் வாசித்து முடிக்க இயலாது என்ற எண்ணம் ஏற்படும் போது, "ஏசப்பா எனக்கு உதவி செய்யுங்க, இந்த வேத வாசிப்பு சவாலில் இணைந்து விட்டேன், மறுபடியும் நான் பின்னிட்டு போகக்கூடாது" என்று ஜெபிக்கும் போது இருதயத்தின் விருப்பங்களை நிறைவேற்றிய தேவன் எனக்கு Free Time நிறைய கிடைக்கச் செய்து, கடந்த வருடம் 12 முறை வேதத்தை வாசித்து முடிக்க கிருபை செய்தார். இந்த ஆண்டும் ஜனவரி 2025-இல் ஒரு மாதம் Plan-ல் இணைந்தேன். பல்வேறு சூழ்நிலை காரணமாக என்னால் one month plan முடிக்க இயலவில்லை. அதனால் பிப்ரவரி 2025 மூன்று மாதம் plan இணைந்து முழுவதுமாக வேதத்தை வாசித்து முடிக்க தேவன் கிருபை செய்தார்.

### நீங்கள் பரிசுத்த வேதாகம வாசிக்கும் போது உங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்ன?

இதன் மூலம் நான் பெற்ற பெரிய ஆசீர்வாதம் என்னவென்றால், என் மூத்த மகன் உங்களைப்போல நானும் வேதத்தை வாசிக்க வேண்டும் என்று சொல்லி, என்னையும் வேதவாசிப்பு சவாலில் இணைத்து விடுங்கள் என்று சொல்லி, GODependence வேதாகம வாசிப்பு சவாலில் இணைந்து ஒரு முறை முழுவதுமாக வாசித்து முடிக்க தேவன் கிருபை செய்தார். அதுமட்டுமல்ல கடந்த சில வருடங்களாக அதிகளவு நேரத்தை மொபைல் போனில் செலவழித்து வந்தேன். ஆனால் 2024 வருடம் வேதவாசிப்பு சவாலில் இணைந்த பின்பு போனில் Time செலவிடுவதை குறைத்து வேதத்தை வாசிக்க கர்த்தர் எனக்கு உதவி செய்தார்.

### இறுதியாக, பரிசுத்தவேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஓரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?

கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கும் போது ஒவ்வொரு நாளும் அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேண்டிய மன்னாவை கொடுத்து தேற்றினார். கர்த்தருடைய வார்த்தையை வாசித்து அதன்படி நடக்க வேண்டும். அது நமக்கு மாத்திரம் அல்ல, நம்முடைய பின் சந்ததிகளும் கர்த்தரை சேவிக்க, அவர்களுக்கும் அது ஆசிர்வாதத்தை தரும். கர்த்தருடைய வேதத்தை இன்னும் அநேக முறை வாசிக்க அதன்படி நடக்க கர்த்தர் அடியேனுக்கு கிருபை செய்வாராக. கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

உங்கள் வாழ்க்கையே மாற்றும் ஒரு புத்தகம் என்றால் அது வேதாகமம் — CLICK HERE SIS.AMUTHA

தடைகள் எல்லாம் தகர்த்து, வேதாகமம் வாசிக்க தேவன் கிருபை செய்தார் — CLICK HERE SIS.GNANA JEYA



பரிசுத்த வேதாகமத்தைப் பற்றி அல்ல, பரிசுத்த வேதாகமத்தையே வாசியுங்கள். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை ஆகும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே தேவனுடைய வார்த்தை. - R. A. டோரி

# 2 கொரிந்தியர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 55 - கி.பி. 56
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 55
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் கடிதம் தன்னிலை விளக்கக்கடிதமாக அமைந்துள்ளது. இது பவுலின் உள்ளத்தையும் உணர்வுகளையும் மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது; தம் அப்போஸ்தப் பணி முறையானது என நிலைநாட்டுவதையும், தம் பணியை இகழ்ந்து பேசியவர்கள்மேல் சினங்கொண்டு அவர்களைத் தாக்குவதையும், தாம் இகழ்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட போது உள்ளம் வேதனையடைந்து கண்ணீர் விடுவதையும், கொரிந்தியர் மனம் மாறியபோது ஆறுதலாய் நிறைந்துமனம் மகிழ்ச்சியடைவதையும் நாம் கண்டு அவரோடு ஒத்துணர முடிகிறது.

## சூழலும் நோக்கமும்

பவுல் கொரிந்தியருக்கு முதலாம் கடிதத்தை எழுதிய பின் கொரிந்திலிருந்து போலிப் போதகர்கள் அவருக்கு எதிராக கலகமூட்டினர். அவர் கொரிந்துக்கு வரும் திட்டத்தை மாற்றியதால் அவர் உறுதியற்ற மனமுடையவர் எனறனர்; நன்கொடை திரட்டி வந்ததால் நேர்மையற்றவர் என்றனர். அவர் தற்பெருமைமிக்கவர், நல்ல தோற்றமோ பேச்சுவன்மையோ இல்லாதவர், இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலராய் இருக்கத் தகுதியற்றவர் என்றனர். பவுல் தீத்துவைக் கொரிந்துக்கு அனுப்பி இச்சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பணித்தார்; தீத்து திரும்பி வந்தபின் கொரிந்தியர் மனம்மாற்றம் பெற்றதை அவரிடமிருந்து அறிந்து மகிழ்ந்தார்; குறிப்பாக 1 கொரி 5 இல் சொல்லப்பட்ட ஒழுக்கக்கேடான ஒருவன் மனம்மாறி மீண்டும் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது குறித்து மகிழ்ந்தார். எனவே மனம் மாறிய கொரிந்தியருக்கு நன்றி கூறும் நோக்குடனும் தம் அப்போஸ்தலப் பணியின் அதிகாரத்தை ஏற்காதோரை அதை ஏற்கச்செய்யும் நோக்குடனும் அவர் இம்மடலை எழுதினார். கி.பி. 55-56-ஆம் ஆண்டுகளில் இதனை எழுதினார். சிலர் இதனை இன்றும் ஒரே மடலாகவே பார்க்கின்றனர். வேறு சிலரோ 1-9 அதிகாரங்களை ஒரு மடலாகவும், 10-13 அதிகாரங்களை இனனொரு மடலாகவும் பார்க்கின்றனர். ஆனால் வேறு சில அறிஞர்கள் இக்கடிதம் ஐந்து மடல்களின் தொகுப்பு என்கின்றனர்; (1) தம் பணிபற்றிய விளக்க மடல் (2:14-7:4); கண்ணீர்மடல், ( 10-13): (3) ஒப்புரவுமடல் (1: 1-2:13; 7:5-16); (4) நன்கொடை பற்றிக் கொரிந்தியருக்கு மடல் (8:1-24); (5) நன்கொடை பற்றி அகாயாவினருக்கு மடல் (9:1-15).

## முக்கிய வசனங்கள்

2 கொரி 3:5, 2 கொரி 3:18, 2 கொரி 5:17, 2 கொரி 5:21,
2 கொரி 10:5, 2 கொரி 13:4

## புத்தகத்தின் சுருக்கம்

- கொரிந்துவில் உள்ள திருச்சபையில் உள்ள விசுவாசிகளை வாழ்த்தி, முதலில் திட்டமிட்டபடி அவர் ஏன் அவர்களைச் சந்திக்கவில்லை என்பதை விளக்கிய பிறகு (1:3–2:2), அவர் கிறிஸ்துவின் நீதியின் மகிமையான ஊழியத்தை நியாயப்பிரமாணமாகிய "கண்டிப்பின் ஊழியத்திற்கு" ஒப்பிடுகிறார் (வ. 3:9) மற்றும் கடுமையான துன்புறுத்தலுக்கு மத்தியிலும் தனது ஊழியம் செல்லுபடியாகும் என்பதில் தனது நம்பிக்கையை அறிவிக்கிறார் (4:8-18). அதிகாரம் 5 கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையை கோடிட்டுக் காட்டுகிறது - புதிய இயல்பு (வ. 17) மற்றும் கிறிஸ்துவின் நீதிக்காக நமது பாவத்தின் பரிமாற்றம் (வச. 21) போன்றவையும், அதிகாரங்கள் 6 & 7, பவுல் தன்னையும் தன் ஊழியத்தையும் தற்காத்துக்கொள்வதையும் காண்பிக்கின்றன. அதிகாரங்கள் 8 & 9 ல், கொரிந்துவில் உள்ள விசுவாசிகளுக்கு மாசிதோனியாவில் உள்ள சகோதரர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றவும், தேவைப்படும் பரிசுத்தவான்களுக்கு தாராள மனப்பான்மையை காட்டவும் பவுல் அறிவுறுத்துகிறார். பவுல் அவர்கள் மத்தியில் தனது அதிகாரத்தை (அதிகாரம் 10) மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் தனது கடிதத்தை முடிக்கிறார். கிறிஸ்துவுக்கான தனது தகுதிகள் மற்றும் துன்பங்களைப் பற்றி தயக்கத்துடன் பெருமைப்பட வேண்டியதற்காக அவர் தன்னை ஒரு "முட்டாள்" என்றும் அழைக்கிறார் (அதிகாரம் 11). பவுலால் அனுபவிக்க தேவனால் அனுமதிக்கப்பட்ட பரலோகத்தின் தரிசனம் மற்றும் அவரது மனத்தாழ்மையை உறுதிப்படுத்த தேவனால் கொடுக்கப்பட்ட "மாம்சத்தில் முள்ளை" விவரிப்பதன் மூலம் அவர் தனது கடிதத்தை முடிக்கிறார் (அதிகாரம் 12).

## தொடர்புகள்

பவுல் தனது கடிதங்கள் முழுவதும், மோசேயின் சட்டத்தை அடிக்கடி குறிப்பிடுகிறார், அதை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி மற்றும் கிருபையின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பின் மகத்துவத்துடன் ஒப்பிடுகிறார். 2 கொரி 3:4-11 இல், பவுல் பழைய ஏற்பாட்டு சட்டத்தை கிருபையின் புதிய உடன்படிக்கையுடன் வேறுபடுத்துகிறார். ஆவியானவர் உயிரைக் கொடுக்கிறார் எனவும் நியாயப்பிரமாணம் "கொல்லுகிறது" என்றும் குறிப்பிடுகிறார். சட்டம் என்பது "மரண ஊழியம், அது கல்லில் எழுதப்பட்டு பொறிக்கப்பட்டுள்ளது" (வச. 7; யாத் 24:12) ஏனெனில் அது பாவத்தைப் பற்றிய அறிவையும் அதன் தண்டனையையும் மட்டுமே தருகிறது. நியாயப்பிரமாணத்தின் மகிமை என்னவென்றால், அது தேவனுடைய மகிமையை பிரதிபலிக்கிறது. எனவே ஆவியின் ஊழியம் நியாயப்பிரமாணத்தின் ஊழியத்தை விட மிகவும் மகிமை வாய்ந்தது, ஏனென்றால் அது கிறிஸ்துவை நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாக வழங்குவதால், அது அவருடைய இரக்கம், கிருபை மற்றும் அன்பை பிரதிபலிக்கிறது.

## நடைமுறைப் பயன்பாடு

பணம் மட்டுமல்ல, நேரமும் கூட. மாசிதோனியர்கள் தாராளமாகக் கொடுத்தது மட்டுமல்லாமல், "அவர்கள் தங்களை முதலில் கர்த்தருக்கும், பிறகு எங்களுக்கும் தேவனுடைய சித்தத்தின்படி ஒப்புக்கொடுத்தார்கள்" (2 கொரி 8:5). அவ்வாறே, நம்மிடம் உள்ள அனைத்தையும் தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். அவருக்கு உண்மையில் நம்முடைய பணம் தேவையில்லை. அவர் சர்வ வல்லமை படைத்தவர்! அவர் இதயத்தை விரும்புகிறார், அவருக்கு சேவை செய்யவும், அவரைப் பிரியப்படுத்தி நேசிக்கவும் விரும்புகிறார். நாம் எல்லாம். நாம் நம் வாழ்க்கையை நம் பரலோக தந்தைக்கு சேவை செய்ய செலவிட வேண்டும். முதலில் கர்த்தருக்கும், பிறகு சபைக்கும், இயேசு கிறிஸ்துவின் ஊழியப் பணிக்கும் நம்மைக் கொடுக்க வேண்டும்.

## நூலின் அமைப்பு

அமைப்பு
1) முன்னுரை (வாழ்த்தும், தேவனுக்கு நன்றி கூறுதலும்) 1:1 - 11
2) பவுலின் பயணத் திட்டத்தை மாற்றியது குறித்து விளக்கம் 1:12 - 2: 13
3) தம் பணிபற்றிய விளக்கம் 2:14 - 6:13
4) பரிசுத்த வாழ்விற்கான அழைப்பு 6:14 - 7:2
5) பவுலின் ஆறுதலும் மகிழ்ச்சியும் 7:3 - 16
6) யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு நன்கொடை திரட்டுதல் 8:1 - 9:15
7) பணிபற்றிய குற்றச்சாட்டுக்கு மறுமொழி 10:1 - 13:10
8) முடிவுரை 13:11 - 14

GODDependence
தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

விடாமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிப்பதன் மூலம், உங்கள் மனதை வேத வசனங்களால் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அதன் மதிப்பையும் ஆற்றலையும் விரைவில் கண்டுபிடிப்பீர்கள். - ஜே சி ரைல்

1

## சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் (CBRC) 2025-26

2025–26 ம் கல்வியாண்டிற்கான சிறுவர் வேதவாசிப்புச் சவால்கள் (CBRC) ஜூன் 16, 2025 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

150க்கும் மேற்பட்ட பள்ளிசெல்லும் மாணவர்கள் இந்தக் குழுக்களில் இணைந்து பள்ளி செல்லும் நாட்களில் பரிசுத்த வேதாகமதையும் வாசிக்க ஆரம்பித்துள்ளனர்.
i
இவற்றில் 8 வயது முதல் 13 வயது வரையும் உள்ள சிறுவர்கள், (8 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கும் சிறப்பு அனுமதி) என 3 வகையான வயது பிரிவினர்களாக தமிழ் மற்றும் ஆங்கிலம் என இருமொழிகளில் மொத்தம் 6 குழுக்களாக இணைந்துள்ளனர்.

இதில் இன்னும் சிறுவர்களை இணைக்க விரும்பினால், மேலும் விபரங்களுக்கு +965 65962559 என்ற எண்ணில் வாட்சாப்பில் தொடர்பு கொள்ளலாம்.



2




## GODependence கருத்தரங்கு - ஜூன் 2025

**தலைப்பு: படிப்பில் சிறந்து விளங்குவது எப்படி?**

(பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தினமும் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களில் மத்தியிலும் படிப்பில் சிறந்து விளங்குவது குறித்த ஆலோசனைகள். பள்ளி மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டு அவர்களுக்கு இதுகுறித்து எழும் கேள்விகளுக்கான பதில்களை கலந்துரையாடி அறிந்துகொள்ளும் ஒரு நேரலை நிகழ்வு)

**நாள்: 29 ஜூன் 2025 ஞாயிறு மாலை இந்திய நேரம் 4 முதல் 5 மணி வரை**

3

## வேத தியான குழுக்கள் (BMG) - July 2025 முதல்

வேத தியான குழுக்கள் (BMG) மீண்டும் ஆரம்பித்து தொடர்ந்து நடத்தப்பட இருக்கின்றன.

இவற்றில் கலந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கான பயிற்சிகள் ஜூலை 2025 ல் நடைபெறும்.

இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் நமது வேதவாசிப்பு சவால் குழுக்களில் பகிரப்படும்.



FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

X GODependence

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்